**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

**<u>OS.No. 23 / 2021</u>**

2025 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 02 ஆம் நாள் புதன்கிழமை **பி.வா.சா.1** வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.M.நிர்மலா, கிரேடு–1 பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | வட்டம் | |
| த/பெ | ஆரோக்கியசாமி | தொழில் | |
| கிராமம் | | வயது | |

**<u>பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் 9 ம் பிரதிவாதி ஆவேன். எனக்காகவும் இந்த வழக்கின் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்காகவும் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் காட்டப்படும் கையெழுத்துகள் என்னுடையவைதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 1–ம் பிரதிவாதியால் 1–ம் வாதி மீது கொடுக்கப்பட்ட எண்.117/2021 – எப்.ஐ.ஆர்–யின் சான்றிட்ட நகலை பி.வா.சா.ஆ–1 ஆகவும், 15.03.2013 தேதி 1–ம் வாதியிடமிருந்து நான் கிரையம் பெற்ற தாவா 6 ம் ஐட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.463/2013 – யின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ–2 ஆகவும், 05.03.2014 தேதிய 1 ம் வாதியிடமிருந்து நான் கிரையம் பெற்ற தாவா 6 ம் ஐட்ட சொத்திற்கான பதிவான கிரைய பத்திரம் எண்.346/2014 –யின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆகவும், ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் 1–ம் வாதிக்கு எதிராக அ.வ.305/2017 –ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் பி.வா.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. செலவு தொகையுடன்

வாதி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

**மறு விசாரணை**

**இல்லை.**

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.